# இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## அலுவலக இடவசதி (குத்தகை அடிப்படையில்) பெற்றுக்கொள்ள வழங்குதல்

ஒரு வருட காலத்திற்கு அநுராதபுரம், கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அலுவலக இடவசதிகளை நிறுவுவதற்காக குத்தகை அடிப்படையில் அலுவலக இடவசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கொழும்பு - 08, இல. 276, எல்விட்டிகல மாவத்தை, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்ததும் ஆணைக்குழுவின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் அழைக்கப்படுகின்றன.

**பூர்த்தி செய்ய வேண்டிய அடிப்படைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு:**

- விண்ணப்பத்தை ஆதனத்தின் உரிமையாளர் சமர்ப்பிக்க வேண்டும்.
- ஆதனத்திற்கு தெளிவான பத்திரங்கள் இருக்க வேண்டும்.
- விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
- குத்தகை காலம் ஒரு வருடமாக இருக்க வேண்டும்.
- மாநகர சபை எல்லைக்குள், பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்திருக்க வேண்டும்.
- ஒற்றை மாடி கட்டிடம் அல்லது பல மாடி கட்டிடத்தின் தரை தளம் சுமார் 700 சதுர அடி பரப்பளவில் இருக்க வேண்டும்.
- குறைந்தது 05 வாகனங்களுக்குப் போதுமான வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும்.
- கட்டிடம் 15 வருடங்களுக்குள் நிர்மாணிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2026-02-24ஆம் திகதி முதல் 2026-03-13ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 5,000.00 ரூபாவைச் செலுத்துவதன் பேரில் அல்லது 2026-03-17ஆம் திகதிக்கு ஆகக்கூடியது 3 வேலை நாட்களுக்கு முன்னர் வங்கி கொடுப்பனவுச் சீட்டின் பிரதியுடன் ada-admin@trc.gov.lk என்ற முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்புவதன் மூலம் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் கூட்டுறவு அலுவல்கள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பப்படிவமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

பணம் செலுத்தும் முறை ரொக்கப் பணமாக அல்லது நிகழ்நிலை பரிமாற்றம் / வங்கிக் கொடுப்பனவு மூலம் மக்கள்வங்கி, நாரஹென்பிட்ட எனும் கிளைக்கு 119-1001-4-3693169 என்ற கணக்கிலக்கத்திற்கு அனுப்பலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறு உறைகளில் இட்டு அதில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என அடையாளமிட்டு பின் அவ்விரு உறைகளையும் முத்திரைக் குறி பொறித்த தனியொரு உறையில் உள்ளிட வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''.................. மாவட்டத்தில் குத்தகை அடிப்படையில் அலுவலக இடவசதி வழங்குதல்'' எனும் தலைப்பு இடப்பட்டிருக்க வேண்டும்.

விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்ட படிவங்களைப் பயன்படுத்தி கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது உரிமையாளரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி விலைமனுக்களுடன் அங்கீகாரக் கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

அனைத்து விலைமனுக்களுடனும் இருபதாயிரம் ரூபாய் (இலங்கை ரூபாய் 20,000.00) பெறுமதியான ''விலைக்கோரல் பிணை முறி''இணைக்கப்பட வேண்டும். இது இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட நாட்டில் செயல்படும் ஒரு வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டும் அல்லது ரொக்க பண வைப்பு வடிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த விலைக்கோரல் பிணை முறி விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில் இருக்க வேண்டும் மற்றும் 2026.05.16 ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

விலைமனுக்களை 2026-03-17ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும் அல்லது கொழும்பு - 08, எல்விட்டிகல மாவத்தை, இல. 276, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட வேண்டும்.

பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல் முடிவுறுத்தல் நேரத்தில் பின் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)

**பணிப்பாளர் / நிர்வாகம் மற்றும் நிறுவன விவகாரங்கள்,**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**இல. 276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு - 08**
**2026 - 02 - 22**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**இல. 276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 08**